முருகப்பெருமான் துணை

அருட்பெருஞ்சோதி அருட்பெருஞ்சோதி தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்சோதி

**மகான் கோட்புலி நாயனார் அருளிய ஒளி சூட்சும நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T.ராஜேந்திரன், M.A.,B.Ed.

06.12.2018, வியாழக்கிழமை

1. **குமரகிரி கண்ட குருராஜா**
**கொண்டாடும் தொண்டர் படைகள்**
**குமரகிரி தொட்டு உலகமெங்கும்**
**குறையிலா அறச்சேவை ஆற்ற**
2. ஆற்றவே சன்மார்க்கம் கொண்டு
அற்புதம் நிகழ்த்தும் அரங்கா
ஏற்று உன் வழி வரும் மக்கள்
ஏழ்மை கஷ்டம் விலகி பயனுறுவர் என
3. என விளம்பி ஒளி சூட்சும நூலை
**இனிதே விளம்பி தேள் திங்கள்**
**ஞானம்பட இருபான் திகதி குருவாரம்**
**(விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 20ம் நாள் 06.12.2018, வியாழக்கிழமை)**
**நாட்டிடுவேன் கோட்புலி நாயனார் யானும்**
3. யானும் உலக நலமுற உரைப்பேன்
உயிர் காக்கும் உயர் கொள்கை
ஞானவழி வளர்க்கும் அரங்கன்
ஞானமதை ஏற்று வருக
4. வருகவே மக்களுக்கு ஏற்றம்
வளமும் பலமும் ஆளுகையும்
முருகப்பெருமான் தயவாகக் கிட்டும்
முழுமைபட சரணடைவு கொண்டுவர
5. வருகவே அவரவர் விரும்பும்
வாழ்க்கையும் திடமான தேட்டும்
பெருமைபட வம்ச விருத்தியும்
பொருள் வளமும் புகழ் கீர்த்தியும்
6. கீர்த்திமிகு சமத்துவ சமதர்ம
குறையிலா இணக்கமான சமூகமும்
நேர்த்தியாக கண்டு கலியுகத்தார்
நிறைவும் நிம்மதியுமான வாழ்வும் பெறுவர்
7. பெருமைமிக்க அரங்க ஞானி
பேரருளை மக்கள் அடைய
தரும சிந்தை வளர்வதுடன்
தன்னலமான போக்கு விலகி
8. விலகி எல்லா தேசத்திலும்
வினை வெல்லும் தன்னார்வ
வளமான தொண்டுகள் பெருகி
வையகமே மேல்நிலை பெறும்

9. நிலைபெற்ற ஞானி அரங்கன்
நிழற்கிட்ட கருமவினை அகலும்
பிழையான ஊழல் சிந்தனைகள்
பொருளாசை யாவும் விட்டு விலகி

10. விலகியே ஆசான் வழிக்கு வர
விரைந்து உலக மாற்றமும்
கலகமிலா பாதுகாப்புச் சூழலும்
கருணைமிக்க பூமியாக உலகம் மாறும் ஒளி சூட்சும நூல் முற்றே.

–சுபம்–

**முருகப்பெருமான் துணை**

**மகான் கோட்புலி நாயனார் அருளிய ஒளி சூட்சும நூலின் சாரம் :**

ஞானமலையாம் குமரகிரிதனை கொண்டிட்ட குருராசனே உம்மை தலைவனாக ஏற்று குருவாய் கொண்டாடும் தொண்டர் படைகள் எல்லாம் குமரகிரியில் இருந்து துவங்கி உலகமெலாம் பரவி குறையற்ற வகையில் நிறைவாக அற்புதமான அறச்சேவைகளை ஆற்றிட உலகினில் சன்மார்க்கத்தின் மூலமாய் எல்லையற்ற அற்புதங்களை நிகழ்த்தும் அரங்கமகா தேசிகனே உம்மை குருவாக ஏற்றுக் கொண்டு உமது தூயநெறி கொள்கைகளின்படி நடந்து உம்மைப் பின்பற்றி தொடர்கின்ற மக்களெல்லாம் அவரவரின் ஏழ்மை நிலை விலகி கஷ்டங்கள் விலகி பயன் பல பெறுவார்கள் என அரங்கா உமது பெருமைகளை உலகமெலாம் கூறியே உலக நலம் கருதி ஒளி சூட்சும நூல்தனையே **விளம்பி வருடம் கார்த்திகை மாதம் 20ம் நாள் 06.12.2018, வியாழக்கிழமையான** இன்றைய தினமதனிலே கோட்புலி நாயனார் யானும் உரைக்கின்றேன் என்கிறார் மகான் கோட்புலி நாயனார்.

உயிர் காக்கும் உயர் ஞான கொள்கைகளை ஞானவழிதனில் செலுத்தி உலகினில் வளர்த்து வருகின்ற ஆறுமுக அரங்கனின் தூயநெறிக் கொள்கைகளை ஞான உபதேசங்களை மக்கள் ஏற்று கடைப்பிடித்து வரவர அவர்களுக்கு உயர்வான நிலை உண்டாகி வாழ்வினில் முன்னேற்றம் ஏற்படும். சகல வளமும் சகல பலமும் ஆளுகையும் பெருகிடும்.

முருகப்பெருமானின் தயவினால் கிடைக்கின்ற சரணாகதிதனை முழுமையுடன் அரங்கன் திருவடிகளில் சரணடைந்து விட அவரவரும் விரும்புகின்ற வாழ்க்கையும் திடமான வருவாயும் பெருமையுடன் வம்சவிருத்தியும் பொருள் வளமும் பெருகி புகழ் பெற்று நல்ல பெருமைகளையும் அடைந்து சமத்துவ சமதர்மமிக்க சமூகமாக குறைகள் இல்லாத இணக்கமான சமூகமாக நேர்த்திமிக்க உலகினை உலகோர் அடைந்து கலியுகத்திலும் கலியுக துன்பம் நீங்கி நிறைவும் நிம்மதியும்மிக்க வளமான வாழ்வினை பெற்றிடுவார்கள்.

பெருமைமிக்க ஆறுமுக அரங்கமகா தேசிக ஞானியரின் பேரருளை மக்களெல்லாம் பெற்றிட பெற்றவர்களுக்கு தருமசிந்தை வளர்ந்து தன்னலமான போக்குகள் எல்லாம் விலகி தன்னலம் அற்ற பொதுநலமான சிந்தைகள் உருவாகி எல்லா தேசங்களிலும் வினைகளை வெல்லும் வகையில் மக்கள் தன்னார்வமாய் வளமான தொண்டுகளை அதிக அளவில் செய்து இந்த உலகமே மேல்நிலை பெற்றிடுமப்பா. நிலைபெற்ற மரணம் தவிர்த்த மகான் ஞானி அரங்கன் திருவடி நிழல் ஒருவருக்கு கிடைத்திட்டால் அவரவரின் கர்மவினைகள் அவர்களை விட்டு அகன்று ஓடும், அவர்களிடம் உள்ள பிழையான செயலான ஊழல் சிந்தைகள் பொருளாசை யாவும் விலகி அவரெல்லாம் ஆசான் அரங்கனின் வழிக்கு வர வேண்டும்.

ஆசான் அரங்கனின் தர்மத்தின் வழிக்கு உலகோர் வந்து தர்மமும் தொண்டுகளும் செய்திட இவ்வுலகமே உலக மாற்றத்தினை அடைந்து கலகங்கள் ஏதும் இல்லாத பாதுகாப்பு சூழல் உருவாகி கருணையே வடிவான ஆட்சியாக ஞானஆட்சியாக இவ்வுலகினில் அமைந்து இந்த புவியே கருணைமிக்க பூமியாக மாறிடுமப்பா என தமது ஒளி சூட்சும நூல் மூலம் உலகறிய உரைக்கின்றார் மகான் கோட்புலி நாயனார்.

–சுபம்–